[1979 மார்ச் 27]

பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம்.

* வினா எண். 532—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு-பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே மீண்டும் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) அடையாறு பக்கிங்காம் கால்வாயில் புற்றுநோய் மருத்துவ மனைக்கு அருகில் உள்ள பாலத்தை விரிவுபடுத்தும் வேலைக்கு அரசு ரூ. 8·00 லட்சத்திற்கு அனுமதி அளித்துள்ளது. மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்—பணித் துறை) அவர்களால் 31–12–1977 அன்று ஒப்புதல் பெற்று அந்த வேலைகள் மும்முரமாய் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண். 533.

திரு. மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, ரூபாய் 5½ இலட்சம் மதிப்பில் ஒரு புது பேருந்து விடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்து அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் கேள்வி நேரம் முடிந்த பிறகு எழுப்புங்கள்.

சேரன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

* வினா எண். 533—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் 1977 மே மாதத்திலிருந்து 1978 மே மாதம் வரை வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்து முறையீடுகள் வந்துள்ளனவா ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

திரு. ப. கோ. கிட்டு (பேரவைச் செயலர்) அமைச்சரின்:

(அ) கோவை சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 1977 மே திங்கள் முதல் 1978 மே திங்கள் முடிய 38 நபர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் 9 நபர்கள் தாமாகவே தொடர்ந்து வேலைக்கு வராததால் வேலை விலக்கம் செய்யப்பட்டனர். ஒரு ஓட்டுனர் கண்பார்வை குறைவு காரணமாக வேலை விலக்கம் செய்யப்பட்டார். எஞ்சியுள்ள 28 நபர்கள் ஒழுங்குநடவடிக்கையின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். மேற்குறித்த காலத்தில் 532 நபர்கள் ஊர்மாற்றம் செய்யப்பட்டனர். அவர்களில் 484 நபர்கள் தங்களின் விருப்பத்திற்கு இணங்க ஊர் மாற்றம் செய்யப்பட்டனர். எஞ்சியுள்ள 48 நபர்கள் நிறுவன செயல்பாட்டு வசதிக்காக ஊர் மாற்றம் செய்யப்பட்டனர்.

(ஆ) ஆம். 10 நபர்களிடமிருந்து மட்டுமே முறையீடுகள் வந்துள்ளன.

(இ) அந்த முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு தக்க பதில்கள் அனுப்பப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே,சேரன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தில் 532பேர்கள் ஊர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று 32 பேர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இது எவ்வளவு கோரமான ஒரு நிகழ்ச்சி என்பதை மாண்புமிகு அமைச்சரின் பேரவைச் செயலர் நன்கு உணருவார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த நிலை மாற்றப்படவேண்டும். தொழிளாளர்கள் தொழிற்சங்கம் வைத்து நடத்தினால் அதிகாரிகள் இவ்வாறு பாரபட்சமான முறையில் நடந்து கொள்கிறார்கள். அவ்வாறு பாரபட்சம் காட்டாமல் தொழிலாளர்களுக்குரிய உரிமையினை வழங்க தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரின் பேரவைசெயலர் குறிப்பிட்டார். அந்த ஆலோசனை உடனடியாக ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் 532 பேரில், 484 பேர்கள் அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கத்தான் ஊர் மாற்றம் செய்யப்பட்டிருக்

1 979 மார்ச் 27]

கிறார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக மாற்றப் படவில்லை. அதிலே நிர்வாக சௌகரியங்களுக்காக மட்டும் 48 பேர்கள் ஊர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அவர்களுடைய மேல் விண்ணப்பம் இப்போது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவையில் கடந்த ஆண்டு சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு எத்தனை சதவீதம் போனஸ் தரப்பட்டது என்ற விவரங்களையும், அதைப்போல் தமிழ் நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களில் கோவையில் உள்ள சேரன் போக்குவரத்துக் கழகம் தான் மிக அதிகமான போனசை பெற்று இருக்கிறது என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் கடந்த ஆண்டு 20 சதவீதம் போனஸ் தன் ஊழியர்களுக்கு கொடுத்திருக்கிறது. தமிழகத்திலே உள்ள அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் தற்போழுது லாபகரமான முறையிலேயே நடந்துகொண்டிருக்கின்றன. போக்குவரத்துக் கழகங்களில் கோவையில் இருக்கக்கூடிய சேரன் போக்குவரத்துக் கழகம் மிகச் சிறப்பான முறையிலே இயங்கி வருவது, இப்பொழுது அனைத்து இந்தியாவிலே இருக்கிற பிற போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் கோவையில் இருக்கிற சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு வந்து அதன் பணி முறைகளை பார்வையிட்டு செல்வதிலிருந்தே நாம் அறிந்துகொள்ளமுடியும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, செயலாளர் அவர்கள் சொல்லியிருக்கிற அடிப்படையில் தவறான நடவடிக்கைகளின் காரணமாக ஊர் மாற்றம் செய்யப்பட்டது என்பது ஒன்று. தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக ஊர் மாற்றம் செய்யப்பட்டதாக அவர்களுக்கு ரிப்போர்ட்டுகள் அனுப்பப்பட்டு அதனுடைய அடிப்படையில் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப் பட்டதை துரிதமாக முடிவு செய்து அதனை சீராக எடுத்து மாற்றல்களை தேவையான முறையில் செய்வார்களா ? வேலையைவிட்டு நீக்கப்பட்டவர்கள் விஷயங்கள் எல்லாம் பரிசீலிக்கப் பட்டு வருவதை துரிதமாக முடிவு செய்து, அவர்களுக்கு வேலையை திரும்பக் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

பே திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் மாறுதல் செய்யப் ட 532 பணியாளர்களில் 484 பேர் அவர்களுடைய விருப்பத்

திற்கிணங்கவே மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கதான் அவர்கள் இடமாற்றங்கள் பெற்றார்கள் என்பதற்கு அவர்கள் கைப்பட எழுதிய கடித ஒப்புதல்கள் இருக்கின்றன. 1977 மே முதல் 1978 மே வரையில் 38 பணியாளர்கள் பணி இறுதி செய்யப்பட்டிருந்தது. அவர்களில் 26 பேர் நடத்துனர்கள், 6 பேர்கள் தொழில் நுட்ப பணியாளர்கள், 4 பேர் ஓட்டுநர்கள் எஞ்சிய 2 பேர் நிர்வாக பணியாளர்கள். அந்த 38 பணியாளர்களில் 9 பேர் தொடர்ந்து பணிக்கு வராமல் இருந்ததன் மூலம் வேலையிலிருந்து தாமாகவே விலகிவிட்டிருந்தனர். ஒரு ஓட்டுநருக்கு கண்பார்வைக் குறைபாடு இருந்தபடியால் அவர் ஓட்டுநராக பணியாற்றத் தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட்டது.

5—10—1977-ல் பொள்ளாச்சி பணிக்களரியிலிருந்து பேருந்துகளை எடுத்துச் செல்லவொட்டாமல் தடுத்த காரணத்தால், 10 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். மேற்குறித்த பத்துப் பேரில் 3 பேர் மீது பல்வேறு குற்றச் சாட்டுகள் ஏற்கெனவே சுமத்தப்பட்டிருந்தன.

எஞ்சிய 18 பணியாளர்களில் 8 பேர் பயணிகளிடமிருந்து உரிய கட்டணத்தை வசூலித்த பிறகு பயணச் சீட்டு கொடுக்காமல் இருந்த காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஒரு பணியாளர் பயணச் சீட்டு கொடுக்காத காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டார். இன்னொரு ஊழியர் செல்லாத பயணச் சீட்டை மறுபடியும் வழங்கிய காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டார்; மற்றும் மூன்று பணியாளர்கள் பயணச்சீட்டுகளில் மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்த காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். எஞ்சியுள்ள 5 பணியாளர்களில் இரண்டு பேர் நிர்வாகத்தின் முன் அனுமதியின்றி சேரன் போக்குவரத்துக் கழகத்தின் வளவுகளுக்குள் துண்டுப் பிரசுரங்களை வழங்கிய காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். ஒரு ஊழியர் வேலை நேரத்தின் போது தொழிற்சங்க உறுப்பினராகுமாறு மற்ற தொழிலாளர்கள் இடையே ஆதரவு திரட்டியதற்காகவும் உடன் பணி புரிந்த ஊழியர்களை மிரட்டியதற்காகவும் பணியிலிருந்து நீக்கப்பட்டார். ஒரு ஊழியர் நிர்வாகத்தின் முன் அனுமதியின்றி தொழில் நிறுவனத்திற்குள் பணம் வசூலித்ததற்காகவும் ஒரு முறை வழங்கப்பட்ட பயணச்சீட்டையே மறு முறை வழங்கினார் என்று பிரிதொரு குற்றச்சாட்டின் பேரிலும் பணியிலிருந்து நீக்கப்பட்டார். எஞ்சியுள்ள ஒருவர் ஒரு ஓட்டுநர், இவரது கண்பார்வை குறைபாடுடையதென்று ஏற்கெனவே சான்றளிக்கப்பட்டு அவர் வண்டியை ஓட்டுவதற்கு தகுதியுடையவர் அல்லர் என்ற அறிவிக்கப்பட்டிருந்தார்; அவர் தம்மை கண் பரிசோதனைக்கு உட்படுத்துகின்ற ஆணை ஒன்றுக்கு கீழ்ப்படிய மறுத்த காரணத்தால் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.

1979 மார்ச் 27]

அந்த 48 பணியாளர்களில் 15 பேர் தொழில் தகராறுகள் சட்டத்தின் 2 (ஏ) பிரிவின் கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரியின் முன்னர் தொழில் தகராறுகளை எழுப்பியிருந்தனர். அவை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. இதுபற்றிய சமாதான பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது என அரசுத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு துறைக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து அறிக்கை வந்துள்ளது. இந்த அரசும், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரூர் மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண். 536—திரு எச். ஜி. ஆறுமுகம், திரு. எம் அண்ணாமலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் அரூரில் மருத்துவமனைக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இந்த ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இல்லை.

[முற்பகல் 9-20]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரூரில் 1976ஆம் ஆண்டில் வனத் துறையிடமிருந்து 10 ஏக்கர் நிலத்தை புதிய மருத்துவமனை கட்டுவதற்காக வாங்கப்பட்டது. அதுவும் அல்லாமல் அரூரில் 40, 47 வருடங்களாக அங்கே இருக்கிற மருத்துவ மனையை விரிவுபடுத்த முடியாமல் அதே நிலையில் உள்ளது. இப்போது 10 ஏக்கரில் 5 ஏக்கர் வீட்டு வசதி வாரியம் வாங்கிக் கொண்டுவிட்டது. இந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலாவது இந்த வருடமாவது அரூரில் புதிய மருத்துவ மனையை கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரூர் மருத்துவ மனையில் தற்போது 11 படுக்கைகள் உள்ளன. அரூரில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உத்தங்கரை பகுதியில் 10 படுக்கை கொண்ட அரசு மருத்துவமனை இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த மருத்துவ மனையில் 1974, 1975, 1976 வருடங்களில் வெளி நோயாளிகள் எண்ணிக்கை முறையை 190,215,277 ஆக இருந்திருக்கிறார்கள்.